# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2013

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 11

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழின் இளமைத் தன்மையைச் சுட்டும் பெயர்.

அ) தீந்தமிழ் ஆ) செந்தமிழ் இ) பைந்தமிழ் ஈ) முத்தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. சிலப்பதிகார வாழ்த்துப் பாவில் போற்றப்பட்ட நகரம்

அ) பூம்புகார் ஆ) தஞ்சாவூர் இ) தகடூர் ஈ) காஞ்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. வான்நிலா என்பது,

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) வேற்றுமைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. கோட்டையைச் சுற்றி அரணுக்காக அகழப்பட்ட நீர்நிலை.

அ) அணை ஆ) அகழி இ) ஏரி ஈ) கால்வாய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. காலத்தின் தேவையில் உணர்வின் உந்தலால் எழுந்தவை.

அ) கழக இலக்கியம் ஆ) வரலாறு இ) புதுக்கவிதை ஈ) மரபுக்கவிதை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. நட்டுவைத்த நடுகல்லே தமிழர் கற்கள் எனக் கூறியவர்

அ) உதயை வீரையன் ஆ) சாலை இளந்திரையன்

இ) அம்பி ஈ) இரவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. சிறப்புப் பெயரோடு பொதுப்பெயருக்கு எடுத்துக்காட்டு,

அ) நூல்அறிவு ஆ) முன்வீடு இ) ஆசிரியர் ஈ) பனைமரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. யாழ்நூலகத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்ட ஆண்டு

அ) 1959 ஆ) 1954 இ) 1981 ஈ) 1970

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. நன்னூல் என்பதைப் பிரித்தால்

அ) நந் + நூல் ஆ) நன்மை + நூல் இ) நன் + நூல் ஈ) நல் + நூல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. அரசபடைகள் நள்ளிரவில் ஊருக்குள் நுழைந்ததும் மக்கள் பதைபதைத்து ஓடினர். இதில் பதைபதைத்து என்பது

அ) அடுக்கிடுக்குத் தொடர் ஆ) அடுக்குத்தொடர்

இ) இரட்டைக்கிளவி ஈ) இணைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. இந்திரவிழாக் கொண்டாடப்படும் காலம்

அ) முதுவேனில் ஆ) கோடை இ) முன்பனி ஈ) இளவேனில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. இராவணகாவியத்தை எழுதியவர்.

அ) இளங்கோவடிகள் ஆ) குழந்தை

இ) தேவநேயப்பாவாணர் ஈ) தனிநாயகம் அடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. "எம்மால் முடியும் எதிர்த்தால் விடியும்! வா தோழியே" என அறை கூறியவர்

அ) அம்பி ஆ) உதயை வீரையன் இ) இரவி ஈ) சாலை இளந்திரையன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. கோவலன் கொலையுண்ட இடம்

அ) மதுரை ஆ) பூம்புகார் இ) காஞ்சி ஈ) காவிரிப்பூம்பட்டினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. நல்லவர் போல் சேர்ந்திருந்து தீமை செய்யும் செயலைக் குறிக்கும் மரபுத்தொடர்,

அ) பஞ்சாய்ப் பறத்தல் ஆ) தட்டிக் கழித்தல்

இ) துறைபோதல் ஈ) அடுத்துக் கெடுத்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. "தேரா மன்னனைக் கண்டு முறை கேட்பேன்." எனக் கூறியவர்

அ) கண்ணகி ஆ) மாதவி இ) கோவலன் ஈ) பாண்டியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. அஞ்சல் என்பதைக் குறிக்கும் சொல்

அ) நூல் ஆ) செய்யுள் இ) மடல் ஈ) பாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. முழு இலங்கையையும் தன்னாட்சிக்குட்படுத்திய தமிழ் மன்னன்.

அ) இராசஇராசசோழன் ஆ) பராந்தகசோழன்

இ) குலோத்துங்க சோழன் ஈ) இராசேந்திரசோழன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. பூவல் என்பது,

அ) ஊர்க் கிணறு ஆ) குளம் இ) ஆறு ஈ) கடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. இலக்கண வகையால் சொற்கள்

அ) ஆறு வகைப்படும் ஆ) நான்கு வகைப்படும்

இ) மூன்று வகைப்படும் ஈ) ஐந்து வகைப்படும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. ஒன்னார் என்ற சொல் குறித்து நிற்பது

அ) அயலவரை ஆ) உறவினரை இ) பகைவரை ஈ) நண்பரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. நாட்டார் பாடல்கள் ______________ பண்ணின் இயல்பான அமைவு,

அ) தாரம் ஆ) விளரி இ) துத்தம் ஈ) தெம்மாங்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. சிலப்பதிகாரக் கதை முடிவடையும் நாடு,

அ) சேரநாடு ஆ) சோழநாடு இ) பாண்டிய நாடு ஈ) காவிரிநாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. அறுபதாம் ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா.

அ) பொன்விழா ஆ) வெள்ளிவிழா இ) வைரவிழா ஈ) பவளவிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. பின்வருவனவற்றுள் வினைத்தொகை.

அ) பவளவாய் ஆ) சேரசோழர் இ) முக்குணம் ஈ) எறிகணை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. பட்டறிவின் பயன் என்பதை விளக்கும் பழமொழி.

அ) சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது.

ஆ) ஆழமறியாமல் காலை விடாதே.

இ) தன்வினை தன்னைச் சுடும்.

ஈ) சிறு துளி பெருவெள்ளம்.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. பின்வருவனவற்றுள் மென்றொடர்க் குற்றியலுகரம்

அ) காடு ஆ) பயறு இ) புற்று ஈ) பஞ்சு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. உறவைப் பேணவும் தலைமுறை வாழவும் உதவுவது

அ) அழகு ஆ) உடை இ) மொழி ஈ) அணிகலன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. பொலுபொலு என்பது

அ) இணைமொழி ஆ) இரட்டைக்கிளவி

இ) அடுக்கிடுக்குத்தொடர் ஈ) அடுக்குத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. ஒரு செயலை எழுவாயே செய்தால் அது

அ) தன்வினை ஆ) பிறவினை

இ) குறைவினை ஈ) எச்சவினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. தாய்மொழியை ஒருவர் கைவிட்டால் என்ன விளையும் என்று கவிஞர் அம்பி எச்சரிக்கிறார்?

2. "தேனோ திரவியமோ".... எனத்தொடங்கும் தாலாட்டுப் பாடலில் தாய் தன் மகவுக்கு ஒப்பிட்டுக் கூறும் பொருட்கள் எவை?

3. "நானும் கொஞ்சம் ஏழையடி நடவு கொஞ்சம் செறுத்துப்போடு" இக் கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

4. யாழ் நூலகக் கட்டிடத்திற்கான வரைபடம் யாரால் வடிவமைக்கப்பட்டது?

5. இலங்கையில் பண்டைத் தமிழ்ச் சிற்றரசுகள் இருந்த இடங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

6. இன்றய இலங்கைத்தீவு எவ்வாறு தோன்றியதாகக் கூறப்படுகிறது?

7. நாட்டார் பாடல்களின் வேறு பெயர்கள் இரண்டு தருக.

புள்ளிகள் 10

**3) பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

- என்று மாறுமோ எங்கள் துயர்
  நின்று நிலைக்குமே இந்த நிலை....

- இனிய சுவை நிறைந்த எம் தமிழைப் பேச
  என்ன தடை உனக்கு என் தோழா....

- நாட்டுக்காய் உயிரை விட்டு
  நடுகல்லாய் நிற்கும் வீரனே....

புள்ளிகள் 10

## 4) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

பண்டைக் காலந்தொட்டு ஈழநாடு தமிழ் மொழிக்குச் சிறந்த இருப்பிடமாகத் திகழுகின்றது. கழககாலத்தில் ஈழநாட்டிலிருந்து பல புலவர்கள் தமிழகம் சென்று தமிழ் மொழியை அலங்கரித்துப் புகழ்பெற்று விளங்கினர். அவருள் ஒருவர் ஈழத்துப் பூதந்தேவனார். அவரது பாக்களுட் சில கழக நூல்களிற் காணக்கிடக்கின்றன. அதுமட்டுமன்றி அக்காலத்தில் ஈழநாட்டை ஆண்ட சிங்கள அரசரும் தமிழ் மொழியையும் தமிழப் புலவரையும் மிகவும் ஆதரித்து வந்தனர். தம்பதேனியாவில் இருந்து அரசாண்ட மூன்றாம் பராக்கிரமபாகு என்பவன் முன்னிலையில் போசராச பண்டிதர் என்பவரால் இயற்றப்பட்ட சரசோதி மாலை என்னும் நூல் அரங்கேற்றப்பட்டது.

அதன்பின் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியிலும் ஈழநாட்டிலே தமிழ்மொழி வளர்ச்சி குன்றவில்லை. தமிழ்மொழி தனது வளர்ச்சியில் பழைய முறையோடு புதிய முறையையும் தழுவிக் கொண்டது. பின்னர் ஆங்கில ஆட்சி தொடங்குகின்றது. இக்காலத்தில் வாழ்ந்த சின்னத்தம்பிப் புலவர் விரைவிற் கவிபாடும் வல்லமை பெற்றவராகத் திகழ்ந்தார். அவர் மறைசையந்தாதி, கல்வளையந்தாதி என்னும் பிரபந்தங்களை இயற்றினார்.

ஈழநாடானது ஆங்கிலேயரது கையில் சென்றதும் தமிழ்மொழி புதிய பாதையில் வளரத் தொடங்கியது. புத்தம் புதிய கலைகள் தோன்றின. ஆங்கிலேயருடன் கிறித்தவ சமயத்தைப் பரப்ப வந்த மதகுருமார் தம் சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்கு செய்யுள் நடை இடையூறாக இருந்ததைக் கண்டு கற்றோரும் கல்லாதோரும் தமது கொள்கையை இலகுவில் விளங்கிக் கொள்வதற்காக வேண்டிய உரை நடையைக் கையாளத் தொடங்கினர். இக்காலத்திலே தான் தமிழில் உரை நடை வளர்ச்சி தோன்றியது. இதனால் தமிழ் மேலும் வளர்ச்சியடையத் தொடங்கியது.

1. போசராச பண்டிதர் என்பவரால் இயற்றப்பட்ட நூல் எது?

2. ஈழநாட்டிலிருந்து தமிழகம் சென்று தமிழை அலங்கரித்த புலவர் யார்?

3. சின்னத்தம்பிப் புலவரால் இயற்றப்பட்ட பிரபந்தங்கள் எவை?

4. இறுதியாக இலங்கைக்கு வந்த ஐரோப்பியர் யார்?

5. செய்யுள் நடை எதற்கு இடையூறாக இருந்தது?

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. செயப்படுபொருள் குன்றிய இரண்டு சொல்லியங்கள் எழுதுக.

______________________________

______________________________

______________________________

2. நடந்தனன் இச் சொல்லின் பகுபத உறுப்புகள் அனைத்தும் இடம் பெறுமாறு பகுத்து எழுதுக.

______________________________

______________________________

3. பின்வரும் மரபுத்தொடர்களின் பொருள் விளங்கச் சொல்லியங்கள் எழுதுக.

இன்பதுன்பம் ______________________________

______________________________

காலங்காலமாக ______________________________

______________________________

சின்னஞ்சிறிய ______________________________

______________________________

4. தமிழிலுள்ள எழுத்துகள் எத்தனை? அவற்றின் வகைகளைத் தருக.

______________________________

______________________________

5. குற்றியலுகர எழுத்துகள் எவை?

______________________________

______________________________

புள்ளிகள் 15

## 6) பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

கல்வி என்பது ஓர் இலக்கு அன்று. இலக்கை எய்துவதற்கான ஒரு கருவியேயாகும். அதாவது நாம் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டும் என்பதற்காக மட்டும் கற்பிப்பதில்லை. அவர்களை வாழ்க்கைக்குத் தகுதியுடையவர்களாக்குவதே நமது நோக்கமாகும். இந்த உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே பிள்ளைகள் தங்கள் வாழ்க்கைக்குத் தம்மை அணியம் (ஆயத்தம்) செய்யத்தக்க கல்வி முறைமை ஒன்றைத்தெரிவு செய்ய வேண்டியது (அவசியமானது) அகத்தியமானது. உண்மையிலே எல்லோரும் தம் வாழ்க்கைக்குத் தம்மைத் தகுதியுடையவர்களாக்குவதற்குக் கல்வி கற்க வேண்டும். முதற்கண் ஒவ்வொருவரும் தத்தம் அறிவுக்கும் ஆற்றலுக்கும் பொருத்தமான தொழிலைத் தெரிவு செய்ய வேண்டும். அதே நேரம் எல்லாத் தொழில்களும் குமுகாயத்திற்குத் தேவையானவை என்பதையும் ஒருவர் உணர்ந்திருத்தல் வேண்டும். தமது தொழில் பற்றி நாணுவதோ மற்றொருவருடைய தொழிலை இழிவாக எண்ணுவதோ கூடாது. இதை மனதிற் கொண்டு அதற்கு ஏற்றவாறு கல்வியைப் பெறுதல் வேண்டும். அத்தகைய கல்வியே குமுகாயத்துக்கு ஏற்புடையதாகவும் நன்மை பயப்பதாகவும் அமையும். இதைத்தான் நம்முன்னோர் ‘செய்யும் தொழிலே தெய்வம்’ என அழகாகக் கூறியுள்ளனர்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள் :**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

**7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- இராவணனது ஆட்சிச்சிறப்பும் கலைச்சிறப்பும
- விஞ்ஞான தொழில் நுட்பமும் இளையோரும்
- உம் மனதை உருக்கிய தாயக நிகழ்வு

புள்ளிகள் 20